முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை, கரூர் மாவட்டம் பொன்னணியாறு அணை மற்றும் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை ஆகிய இடங்களில் சுற்றுலாத் தலங்களை உலகத்தரத்தில் மேம்படுத்தும் நோக்கில் 7.46 கோடி செலவில் முடிவுற்ற 4 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 16.30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.10,2025) தலைமைச் செயலகத்தில், மதுரை மறைமாவட்ட பேராயர் அருட்தந்தை எஸ்.அந்தோணிசாமி சந்தித்து பேசினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சாந்தோம் பேராலய அதிபரும், சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவருமான வின்சென்ட் சின்னதுரை ஆகியோர் உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ முன்னிலையில் 200க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர். உடன் மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் பி.டி. அன்பரசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி , மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (13.10.2025) தலைமைச் செயலகத்தில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் பி.கீதா ஜீவன், உயரதிகாரிகள் நா.முருகானந்தம், மங்கத் ராம் சர்மா, பிரதீப் யாதவ், த.உதயச்சந்திரன், திருமதி எஸ்.மதுமதி, திருமதி எம். லட்சுமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

14 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு!

‘ஃபாக்ஸ்கான்’ நிறுவனம் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்!

சென்னை, அக். 15 - தமிழ்நாட்டில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் 15ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, இதன் மூலம், 14 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாக்ஸ்கானின் இந்திய பிரதிநிதி ராபர்ட் வூ சந்தித்ததை குறிப்பிட்டுள்ளார். மின்னணுவியல் மற்றும் மேம்பட்ட உற்பத்தித் துறைக்கு மற்றொரு பெரிய ஊக்கமாக ஃபாக்ஸ்கான் நிறுவனம் திகழ்கிறது என்றும், அந்நிறுவனம் ஏஐ தொழில் நுட்பம் அடிப்படையிலான உற்பத்தியை தமிழ்நாட்டில் தொடங்கவுள்ளதை உறுதி செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஃபாக்ஸ்கான் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதன் மூலம்14 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை இல்லாத அளவிற்கு மிகப்பெரிய பொறியியல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், திராவிட மாடல் 2.0விற்குகளம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு!

நம் பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக்.15- ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்து, 14 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்கவுள்ளதாக அறிவித்ததையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

இதுதான் திராவிட மாடலின் செயல்பாடு. தமிழ்நாட்டைத் தேர்வு செய்தமைக்காகவும், எங்களுடன் இணைந்து எதிர்காலத்தை வடிவமைக்க முடிவெடுத்தமைக்காகவும் நன்றி.

தமிழ்நாட்டைத் தெற்காசியாவின் உற்பத்தி மற்றும் புதுமைக்கான மையமாக உயர்த்துவதற்கான நம் பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

வருவாய்த் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வழங்கினார்!

சென்னை, அக்.15- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன் நேற்று முன்தினம் (13.10.2025) சென்னை-5, சேப்பாக்கம் சர்வே இல்லத்தில் அமைந்துள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தில் பல்வேறு சேவைகளை தொடங்கி வைத்தார். மேலும், உயர் அலுவலர்களுக்கு 10 ஈப்பு மற்றும் இத்துறையில் பணிபுரிந்து காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கியும், இணையவழி பட்டா மாறுதல் சேவையினை கண்காணித்து அதன் தரத்தினை உயர்த்திட தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையத்தினை துவக்கி வைத்தார்.

இணையவழி பட்டா மாறுதல் மற்றும் புல எல்லைகளை அளவீடு செய்தல் போன்ற சேவைகளை கண்காணிக்கும் தரக்கட்டுப்பாடு மையம்:

நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு, ‘தமிழ் நிலம்’ எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக, இணையவழி பட்டா மாறுதல், புல எல்லை அளவீடு, வரைபட விற்பனை போன்ற பல சேவைகளை நில அளவை மற்றும் நிலவரித்திட்டத்துறை பொது மக்களுக்கு இணையவழியில் வழங்கி வருகிறது.

இச்சேவைகளை கூர்ந்து கண்காணித்து அவற்றின் தரத்தினை பேணும் பொருட்டு, ‘தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம் ஒன்று நில அளவை இணை இயக்குநர் (மத்திய நில அளவை அலுவலகம்) தலைமையில் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம் மூலம் இணையவழிச் சேவைகளின் புள்ளி விவரங்களை கண்காணிக்கும் வகையில், ‘DASHBOARD’ உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் இணையவழி பட்டா மாறுதல் மற்றும் புல எல்லை மனுக்கள் போன்ற இணையவழிச் சேவைகள் விரைவாகவும், செம்மையாகவும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குதல்:

தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் பல்வேறு இனங்களில் பணிபுரிந்து, பணியின்போது காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு சென்னை, கரூர், திருச்சிராப்பள்ளி, இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், தஞ்சாவூர், கடலூர் ஆகிய 7 மாவட்டங்களை சார்ந்த 8 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இத்துறையில் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை அலுவலர்களுக்கு ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் 10 புதிய வாகனங்கள் வழங்குதல்:

தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் பணிபுரிந்து வரும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர், மதுரை மண்டலத் துணை இயக்குநர் மற்றும் ஈரோடு, திருவாரூர், புதுக்கோட்டை, நீலகிரி, காஞ்சிபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த உதவி இயக்குநர்களுக்கு அவர்களது பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ, 85 இலட்சம் மதிப்பீட்டில் 10 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அந்தந்த மாவட்டங்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை திருமதி. பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் முனைவர் கே.எஸ்.பழனிச்சாமி, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் தீபக் ஜேக்கப், கூடுதல் இயக்குநர் (மறு நிலஅளவை) மு. வெங்கடேசன், இணை இயக்குநர் வ.சரவணன் மற்றும் இத்துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கோவை தெற்கு மாவட்டம், சூலூர் சட்டமன்றத் தொகுதி, சுல்தான் பேட்டை கிழக்கு ஒன்றியம், செஞ்சேரிபுத்தூர் ஊராட்சியில் செஞ்சேரிபுத்தூர் ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்தும் 120 க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்கும் 33ம் ஆண்டு மாபெரும் மாநிலம் தழுவிய கபடி போட்டியை மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் முத்து மாணிக்கம், மகாலிங்கம், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நண்பர் ஆனந்தம் அவர்கள் எனக்கு அவரது மாணவப் பருவ காலம் தொட்டே நண்பராகவும் நம் இயக்கக் கருத்துகளை தனது வலிமை மிக்க கொள்கையாகவும் கொண்டவராவார்.
-பெரியார்

அணி தெரியும் என்பதற்காய் ஆக்கித் தரப்பட்ட வணிகப் பொருள் அல்ல ஆனந்தம் கவிதை, சமூகப் பிணி போக்கும் மருந்து அளிக்கின்றார் கவிதைத் துளி வடிவில், பருகிட இனிப்பதது. உட்சென்றதும் பிணிபோக்கிப் புதுத்தெம்பு தருவதது.
- அண்ணா

பெரியாருடனும் அண்ணாவுடனும் இயக்கத் தலைவர்களுடனும் நெருங்கிப்பழகி தடம் தவறாப் பாதையில் நீண்ட நெடு நாட்களாக இலட்சியப் பயணம் புரியும் நண்பர் ஆனந்தம்.
- கலைஞர்

பெரியார் வரலாற்றாளர்
கவிஞர் எஸ். கருணானந்தம்
நூற்றாண்டு நிறைவு விழா
தோற்றம் : 15.10.1925 மறைவு : 27.09.1989

"மரத்தடியில் மறைந்துறையும் வேர்போல என்னை நான் மறைத்துக் கொண்டு மரத்தைப் பாதுகாத்துக் கிளையும் இலையும் தழைத்துச் செழிக்கப் பெரிதும் உதவி நீரும், உரமும் ஊட்டி வரும் வாடிக்கையுடையேன். திராவிடப் பேரியக்கத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் எனக்குப் பங்குண்டு என்று கூற முடியாதெனினும் என் பணி சிறிதேனும் இல்லையென்று கூறவொண்ணாது"



கவிஞர் கருணானந்தம் அவர்களின் வாழ்க்கையே திராவிட இயக்கத்தின் வளர்ச்சியோடும் வெற்றியோடும் பின்னிப் பிணைந்தது. பின்னதில் இருந்து முன்னதைத் தனியே பிரித்துப் பார்த்துவிட முடியாது அந்த அளவுக்கு நம் இயக்கத்துக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர் கவிஞர் அவர்கள். -முதல்வர் மு.க.ஸ்டாலின்

கவிஞர் கருணானந்தத்தின் நூற்றாண்டு கொண்டாடப்பட வேண்டிய ஒரு கொள்கைக்காரரின் நூற்றாண்டு. இளமையிலேயே தந்தை பெரியாரிடம் கற்றுக் கொண்டவர்; எனவேதான் என்றும் தன்னை விற்றுக் கொள்ளாதவர். படமாகப் பார்ப்பதை விட அவரைப் பாடமாகப் படித்து நமது கொள்கை உறுதிக்கு மேலும் சாணை பிடித்து மகிழ்வோம்! வருக சுயமரியாதை நாயகரின் நூற்றாண்டு! - ஆசிரியர் கி. வீரமணி

கவிஞரின் படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட தருணம்